

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே. சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் ஆர். காந்தி கலந்து கொண்டுகழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்டத்திற்கு வருகை குறித்து தமிழ்நாடு அரசு வளர்ச்சி திட்ட பணிகளின் ஆய்வு குறித்து ஆலோசனை வழங்கினார். இதில் கழக சுற்றுச்சூழல் அணி மாநிலத் துணைச் செயலாளர் ஆர். வினோத் காந்தி, ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன், கண்ணையன், சுந்தரம், அசோகன், கலைமணி, மாவட்ட துணைச் செயலாளர்கள் மு.சிவானந்தம், துரை மஸ்தான், குமுதா குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# வாணியம்பாடியில் யுனானி ஆராய்ச்சி - மேம்பாட்டு நிலையம் நிறுவப்படுமா?

## மக்களவையில் கதிர் ஆனந்த் எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, டிச.4-

வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள வாணியம்பாடியில் யுனானி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம் நிறுவுவதற்கு ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா? என நாடாளுமன்ற மக்களவையில் தி.மு.க.வின் வேலூர் மக்களவைத் தொகுதி எம்.பி. கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.



தமிழ்நாட்டின் வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள வாணியம்பாடியில் யுனானி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம் நிறுவுவதற்கு ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள்?

வேலூர் மண்டலத்தில் முக்கியமான மருத்துவ தாவரங்கள் மற்றும் மூலிகைகளை வளர்ப்பதற்காக மருத்துவ தாவரங்கள் மற்றும் மூலிகை பண்ணைகளை தொடங்குவதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

இது தொடர்பாக கடந்த ஐந்தாண்டுகளில் ஆண்டு வாரியாக ஒன்றிய அரசு வழங்கிய நிதி உதவி என்ன? என மக்களவையில் டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஆயுஷ் அமைச்சகத்தின் மாநில அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் எழுத்துப்பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:-

தற்போது, தமிழ்நாடு மாநிலத்தில் வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள வாணியம்பாடியில் யுனானி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையத்தை நிறுவ ஆயுஷ் அமைச்சகத்திடம் எந்த முன்மொழிவும் இல்லை.

தற்போது தேசிய மருத்துவ தாவர வாரியம் (NMPB), ஆயுஷ் அமைச்சகம், வேலூர் பகுதி உள்ளிட்ட விவசாயிகளின் நிலத்தில் மூலிகை / மருத்துவ தாவரங்களை பயிரிட / பயிரிடுவதற்கு நிதி உதவி வழங்கவில்லை.

இருப்பினும், இந்திய அரசின் ஆயுஷ் அமைச்சகம் 2015-16 முதல் 2020-21 வரை மூலிகை/மருத்துவ தாவரங்களை வளர்ப்பதை ஊக்குவிக்க தேசிய ஆயுஷ் மிஷனின் (NAM) மத்திய நிதியுதவி திட்டத்தை செயல்படுத்தியது. தேசிய ஆயுஷ் மிஷன் திட்டத்தின் மூலிகை/ 'மருந்துத் தாவரங்கள்" கூறுகளின் கீழ், அடையாளம் காணப்பட்ட பகுதிகளில்/மண்டலங்களில் 140 முன்னுரிமைப்படுத்தப்பட்ட மூலிகை/மருத்துவ தாவரங்களை சந்தை மூலம் பயிரிடுவது திட்ட வழிகாட்டுதல்களின்படி, ஆதரவு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு உட்பட முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அமலாக்க முகமைகள் மூலம் விவசாயிகளின் நிலத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்ட மூலிகை/ மருத்துவ தாவரங்களை பயிரிடுதல் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டம் 2015-16 முதல் 2020-21 நிதியாண்டில் தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டது. இதுவரை ஆயுஷ் அமைச்சகம் மத்திய பங்காக ரூ.6 கோடியே 62 லட்சம் செலவில் சுமார் 3,931 ஹெக்டேர் பரப்பளவில் மூலிகை/ மருத்துவ தாவரங்கள் பயிரிடப்பட்டது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

## பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம் - கடலூர் - திருவண்ணாமலை உள்ளிட்ட

# 6 மாவட்டங்களுக்கு மின் கட்டணம் அபராதத் தொகையின்றி செலுத்துவதில் காலம் நீட்டிப்பு!

## அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அறிவிப்பு!

சென்னை, டிச. 4 -

பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் திருவண்ணாமலை ஆகிய 6 மாவட்டங்களில் உள்ள மின் நுகர்வோர்களுக்கு மின் கட்டணம் செலுத்துவதில் ஏற்பட்டுள்ள இடர்பாடுகளை கருத்தில் கொண்டு மின் கட்டணத்தை அபராதத் தொகை இல்லாமல் செலுத்த டிசம்பர் 10-ஆம் தேதி வரை காலநீட்டிப்பு என்று மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி அறிவித்துள்ளார்.



இது குறித்த விவரம் வருமாறு:-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, தமிழ்நாட்டில் பெஞ்சல் புயல் காரணமாக சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் ஆகிய 4 மாவட்டங்களில் உள்ள மின் நுகர்வோர்களுக்கு மின் கட்டணம் செலுத்துவதில் ஏற்பட்டுள்ள இடர்பாடுகளை கருத்தில் கொண்டு மின்கட்டணத்தை அபராதத் தொகை இல்லாமல் செலுத்த டிசம்பர் 10-ஆம் தேதி வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டது.

மேலும் அதை தொடர்ந்து பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கடலூர் கள்ளக்குறிச்சி, தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் திருவண்ணாமலை ஆகிய 6 மாவட்டங்களில் மின் கட்டணம் செலுத்துவதில் ஏற்பட்டுள்ள இடர்பாடுகளை கருத்தில் கொண்டு மின் கட்டணத்தை அபராதத் தொகை இல்லாமல் செலுத்த டிசம்பர் 10-ம் தேதி வரை கால நீட்டிப்பு செய்யப்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.

## துணை முதல்வர் உதய நிதி ஸ்டாலின் பிறந்தநாள்

# திருப்பத்தூரில் நல உதவிகள் - கண் சிகிச்சை முகாம்

## க.தேவராஜி எம்.எல்.ஏ. - அ. நல்லதம்பி எம்.எல்.ஏ. - எஸ். ராஜேந்திரன் பங்கேற்பு!

திருப்பத்தூர், டிச.4-

திருப்பத்தூர், திருப்பத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட பிச்சனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் துணை முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு பால்,ரொட்டி,பழம் மற்றும் ஆர்லிக்ஸ் ஆகியவைகளை 70 கர்ப்பிணி பெண்களுக்கும், 40 புறநோயாளிகளுக்கு மாவட்ட செயலாளர் க.தேவராஜ் எம்.எல்.ஏ. மற்றும் ர் ஏ.நல்லதம்பி எம்.எல்.ஏ. ஆகியோர் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தலைவர். விஜயா அருணாசலம், துணை சேர்மென்.டி.ஆர். ஞானசேகரன், மா.க.இ.ப. பே.து.அ.வி.அன்பழகன், ஒன்றிய அவைத்தலைவர். சி.சின்னதம்பி, ஒன்றிய துணை செயலாளர் டி.கே.சின்ன தம்பி, ஒன்றிய நெசவாளர் அணி அமைப்பாளர். எஸ்.சி.விஜயகுமார், மாவட்ட பிரதிநிதிகள்.எல். சிவலிங்கம், எஸ்.சரவணன், எம்.ஜி.ராமச்சந்திரன்,

ஊராட்சி ஒன்றிய தலைவர்.பன்னீர்செல்வம், இளைஞரணி அமைப்பாளர். அ.ஆதித்யா, ஒன்றிய மாணவரனி அமைப்பாளர் இ. வெங்கடேசன், துணை அமைப்பாளர். கு. மணிகண்டன், மருத்துவர்கள், செவிலியர்கள், பொதுமக்கள் மற்றும் ஏராளனமானோர் கலந்து கொண்டனர்.

திருப்பத்தூர் நகரத்திற்குட்பட்ட 18வது வார்டு, அறிவுசார் மையத்தில் தமிழக துணை முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு இலவச கண்சிகிச்சை முகாமினை மாவட்ட செயலாளர் க.தேவராஜ் எம்.எல்.ஏ. மற்றும் ஏ.நல்லதம்பி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் திருப்பத்தூர் நகர மன்ற தலைவர்.சங்கீதா வெங்கடஷ், நகர செயலாளர். எஸ்.ராஜேந்திரன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர். தே.பிரபாகரன், மாவட்ட துணை அமைப்பாளர்கள்.அ.சம்பத் குமார், டி.கே.மோகன், பொதுக்குழு உறுப்பினர்கள்.ச.அரசு,டி.ரகுநாதன், மாவட்ட அரங்காவல் குழு தலைவர்.டி.சந்திரசேரகன், நகர மன்ற உறுப்பினர். கே.சுபாஷ்,வாசு மருத்துவர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் தொகுதிக்குட்பட்ட மேலநீலித நல்லூர் ஒன்றியம் வடக்கு, தெற்கு பூலாங்குளம் பொதுமக்களின் புதிய போக்குவரத்து வழித்தடம் கோரிக்கையை தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.ஏற்று,இது தொடர்பாக போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கரனிடம் கோரிக்கை வைத்து உடனடியாக சங்கரன்கோவில் வெள்ளப்பனேரி வழித்தடம் எண் 37 பி பேருந்து சேவையை பொதுமக்கள் முன்னிலையில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ.பேருந்தை கொடியசைத்து துவக்கி வைத்தார்.நிகழ்வில் மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் பசுபதி பாண்டியன்,ஒன்றிய பொருளாளர் பண்டாரக்கண்ணு, தொண்டரணி செல்வராஜ், தொ.மு.ச.நிர்வாகிகள் மற்றும் கிராம மக்கள்,பள்ளி மாணவ – மாணவிகள் கலந்து கொண்டனர்.



மாநில இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற மாபெரும் இலவச மருத்துவம் மற்றும் கண் சிகிச்சை முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தொடங்கி வைத்தார். உடன் மருத்துவர் திலிப்குமார் உள்ளார். தி.மு.க. மருத்துவ அணி மாநில துணைச் செயலர் மருத்துவர் திலீப்குமார் ஏற்பாடு செய்தார். இந்நிகழ்ச்சியில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர் இந்நிகழ்ச்சியில் மாவட்ட தி.மு.க. அவைத்தலைவர் சத்தியமூர்த்தி, முன்னாள் எம்.எல்.ஏ, முருகவேல் சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் வேல்முருகன் (முதுகுளத்தூர்). மருத்துவர் சுதர்சன் (ராமநாதபுரம்), முதுகுளத்தூர் பேரூராட்சி தலைவர் ஷாஜஹான், திமுக ஒன்றிய செயலாளர்கள் பூபதி மணி (முதுகுளத்தூர் கிழக்கு), கோவிந்தன் ( முதுகுளத்தூர் மத்தி) ஆறுமுகவேல் ( கடலாடி), குலாம் மைதீன் (சாயல்குடி கிழக்கு), ஜெயபாலன் (சாயல்குடி மேற்கு), இதம்பாடல் ஊராட்சி மன்றத்தலைவர் மங்களசாமி உள்பட முதுகுளத்தூர் சட்டமன்ற பணியாளர்கள் சத்தியேந்திரன், டோனி, ரஞ்சித் மணிகண்டன், உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்

## நிவாரணப் பணிகளை துரிதப்படுத்தினார்

# தருமபுரி மாவட்டத்தில் ஃபெஞ்சல் புயல் - மழையால் பாதிப்பு! சீரமைப்பு பணிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார்!

தருமபுரி, டிச.4-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.12.2024) தருமபுரி மாவட்டத்தில் ஃபெஞ்சல் புயல் மழையினால் ஏற்பட்ட பாதிப்புகளை நேரில் பார்வையிட்டு, சீரமைப்பு பணிகளை துரிதப்படுத்தி, முகாமில் தங்கியுள்ள பொதுமக்களுக்கு நிவாரண உதவிப்பொருட்கள் அடங்கிய தொகுப்புகளை வழங்கினார்.

தர்மபுரி மாவட்டத்தின் டிசம்பர் மாத சராசரி மழையளவு 39.80 மிமீ மட்டுமே என்ற நிலையில், ஃபெஞ்சல் புயலின் தாக்கத்தினால் கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் சராசரியாக 144.45 மி.மீ மழை பெய்துள்ளது. அரூர் வட்டத்தில் அதிகபட்சமாக 422 மி.மீட்டரும், பாப்பிரெட்டிப்பட்டியில் 273 மி.மீட்டரும் மழை பதிவாகியுள்ளது.

புயல் மழை காரணமாக தருமபுரி மாவட்டத்தில் ஊராட்சிகளைச் சேர்ந்த 59 குளங்களும், 129 ஏரிகளும் முழு கொள்ளளவை எட்டியுள்ளன. பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள 5 ஏரிகள் முழு கொள்ளளவை எட்டியுள்ளன. அரூர் வட்டத்தில், ஃபெஞ்சல் புயல் மழையினால் பாதிப்புக்குள்ளான சித்தேரி மலைப்பகுதிக்கு செல்லும் மாநில நெடுஞ்சாலையை சீர்செய்யும் நடவடிக்கைகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், வாணியாறு, அரூர் வட்டம், வரட்டாறு மற்றும் நல்லம்பள்ளி வட்டம் தொப்பையாறு அணைகள் முழு கொள்ளளவை எட்டியுள்ளன. வாணியாறு கரையோர பகுதியில் குடியிருந்த 80க்கும் மேற்பட்ட பொதுமக்கள் அரூர் பேருந்து நிலையம் அருகில் உள்ள காமாட்சியம்மன் மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் ஃபெஞ்சல் புயல் மழை காரணமாக தருமபுரி மாவட்டம், உங்கரானல்லி ஊராட்சி, ஏமகுட்டியூரில் பெருக்கெடுத்து ஓடும் சனத்குமார நதியை பார்வையிட்டு பொதுமக்களிடம் கோரிக்கைகளை கேட்டறிந்தார். தொடர்ந்து நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், தின்னஹள்ளி ஊராட்சி வத்தல்மலை அடிவாரத்தில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட தரைப் பாலத்தை சீரமைக்கும் பணியை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், தின்னஹள்ளி ஊராட்சி, வேப்பமரத்தூர், வே.கொம்மத்தம்பட்டியில் இணைப்புச்சாலை துண்டிக்கப்பட்ட தால் பாதிக்கப்பட்ட பகுதிக்கு சென்ற துணை முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்து இணைப்புச்சாலையை உடனடியாக சீர்செய்யும் பணிகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து மிட்டாநூலஅள்ளி ஊராட்சி, திருமலைக்கவுண்டன் கொட்டாயில் உள்ள வண்ணாந்தேரி ஏரி நிரம்பி உபரி நீர் ஊருக்குள் வருவதை தடுக்கும் வகையில் தூர்வாரப்படும் கால்வாயைப் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

அரூர் காமாட்சியம்மன் திருமண மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள 250க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அரிசி மற்றும் மளிகைப் பொருட்கள், போர்வை உள்ளிட்ட நிவாரண பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார்.

இந்த ஆய்வுகளில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்ய தர்சினி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கி.சாந்தி, ஆகியோர் உள்பட முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஒன்றியச் செயலாளர் சித்தேரி சிவா நிகழ்ச்சி ஏற்பாட்டில் துணை முதல்வர் பிறந்த நாள் விழா!

# மன்னார்குடியில் 47 இடங்களில் கழகக் கொடியேற்றி நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா - பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. - ஏ.கே.எஸ்.விஜயன் பங்கேற்பு!

திருவாரூர், டிச. 4 -

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி மத்திய ஒன்றியம் தி.மு.க. சார்பில் தமிழ்நாடு துணை முதல்வர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 47 இடங்களில் கழகக் கொடியேற்றி, நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று முதல் நடைபெறுகிறது.

தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

விழாவிற்கு தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சு.ஞான சேகரன், மாவட்ட அவைத் தலைவர் க.தனராசு, மேற்கு ஒன்றிய செயலாளர் டி.எஸ்.டி.முத்துவேல், பொதுக்குழு உறுப்பினர் தெ.காஞ்சிதுரை, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வி.கே.எம். முருகானந்தம், ஒன்றிய அவைத் தலைவர் ஐ.டி.அ.நடராஜன், ஒன்றிய பொருளாளர் ஆர். அன்பரசன், துணை செயலாளர்கள் கே.விழிவழகன், க.ராசு, சசிகலா பன்னீர் செல்வம், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.முருகேசன், உ. பார்த்திபன், த.இராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இன்று (4.12.2024 புதன் கிழமை) தொடக்க விழாவாக மாலை 4.30 மணிக்கு மேலவாசலில் உள்ள கழக நிர்வாகிகள் இல்லத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. கழகக் கொடி ஏற்றி, நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

(6.12.2024 வெள்ளிக் கிழமை) காலை 10 மணிக்கு, தென்பாதி உள்ள கழக நிர்வாகிகள் இல்லத்தில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் ந. இளைய ராஜா கழகக் கொடியேற்றுகிறார்.

06.12.2024 வெள்ளிக் கிழமை காலை 11.30 மணிக்கு, தென்பாதியில் உள்ள கழக நிர்வாகிகள் இல்லத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சு.ஞானசேகரன் கழகக் கொடியேற்றுகிறார்.

07.12.2024 சனிக் கிழமை காலை 10 மணிக்கு, வடபாதியில் உள்ள கழக நிர்வாகிகள் இல்லத்தில் தமிழ்நாடு அரசு டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே. எஸ்.விஜயன் கழகக் கொடி யேற்றுகிறார்.

காலை 11 மணிக்கு, வடபாதியில் உள்ள கழக நிர்வாகிகள் இல்லத்தில் மன்னார்குடி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ராஜா சீனிவாசன் கழகக் கொடியேற்றுகிறார்.

மதியம் 12.30 மணிக்கு, வடபாதியில் உள்ள கழக நிர்வாகிகள் இல்லத்தில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் தெ.காஞ்சி துரை கழகக் கொடியேற்றுகிறார்.

08.12.2024 ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு, நெடுவாக்கோட்டையில் உள்ள கழக நிர்வாகிகள் இல்லத்தில் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி கழகக் கொடியேற்றுகிறார்.

காலை 10.30 மணிக்கு, நெடுவாக்கோட்டையில் உள்ள கழக நிர்வாகிகள் இல்லத்தில் மாவட்ட ஊராட்சித் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு கழகக் கொடியேற்றுகிறார்.

காலை 11.30 மணிக்கு, நெடுவாக்கோட்டையில் உள்ள கழக நிர்வாகிகள் இல்லத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் க. தனராசு கழகக் கொடி யேற்றுகிறார்.

14.12.2024 சனிக் கிழமை காலை 10 மணிக்கு, மூன்றாம்சேத்தியில் உள்ள கழக நிர்வாகிகள் இல்லத்தில் தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா கழகக் கொடியேற்றி, நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

**குறிப்பு:**

கிளைக் கழகச் செயலாளர்கள் கிளைக் கழகத்தை கூட்டி கழகக் கொடியேற்றும் நிகழ்ச்சியை மினிட்டில் பதிவு செய்யவும்.

இந்நிகழ்ச்சியில் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, சார்பு அணி நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் தவறாமல் கலந்து கொண்டு சிறப் பிக்குமாறு ஒன்றியக் கழகச் செயலாளர் சித்தேரி சிவா கேட்டுக் கொண்டுள்ளார்.



நாங்குநேரி மேற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் ஆர்.எஸ். சுடலை கண்ணு தலைமையில் ஓசானம் அன்பு இல்லத்தில் காலை உணவு 100 மாற்றுதிறனாளிகளுக்கு வழங்கப்பட்டது. நாங்குநேரி மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட 15 ஊராட்சிகளில் அமையப்பட்டுள்ள கொடிக்கம்பத்தில் கழக கொடி ஏற்றி பள்ளி குழந்தைகள் பேருந்தில் பயணம் செய்து பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது, இந்த நிகழ்ச்சியில் வாசுதேவன் பண்ணையார் ஆறுமுகம், ராஜ் என்ற வான்மாமலை சின்னத்துரை, சங்கர், மாயகிருஷ்ணன், ஜார்ஜ், வானு, குமார், ராபின், ரவி அருணாச்சலம், முத்து வர்கீஸ், ராஜேந்திரன், மதிய ஆல்ட்ரின், பொறியாளர் அணி பாரத், தொழிலாளர் அணி உச்சிமாகாளி, செல்வநாயகம், பாலமுருகன், கோமதி சங்கர் பார்வதி, விநாயகம், அன்னபாண்டி, தாமஸ் ராஜா, ஜே தாமஸ், முருகன் சங்கர பாண்டி, மணிகண்டன், நம்பிராஜன், நைனார், கண்ணன், ஈஸ்வரன், பரமசிவம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.